# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

## 2021 – 2022

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தைப்பொங்கல் அன்று மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பு

அ ) வீரம் ☐ ஆ ) மானம் ☐

இ ) விருந்தோம்பல் ☐ ஈ ) ஒழுக்கம் ☐

2. வறுமை என்பது

அ ) ஏழ்மை ☐ ஆ ) பெருமை ☐

இ ) சிறுமை ☐ ஈ ) செல்வம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. உயிர் நெட்டெழுத்துகள்

அ ) 5 ☐ ஆ ) 7 ☐

இ ) 3 ☐ ஈ ) 6 ☐

4. எல்லாளனது நினைவாலயம் அமைந்துள்ள இடம்

அ ) அநுராதபுரம் ☐ ஆ ) திருகோணமலை ☐

இ ) மன்னார் ☐ ஈ ) யாழ்ப்பாணம் ☐

5. போர்த்துக்கேயரை இறுதிவரை எதிர்த்துப் போராடிய மன்னன்

அ ) பண்டாரவன்னியன் ☐ ஆ ) சங்கிலியன் ☐

இ ) காக்கைவன்னியன் ☐ ஈ ) எல்லாளன் ☐

6. எழுதினேன் என்ற சொல் குறிக்கும் இடம்

அ ) தன்மை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) படர்க்கை ☐ ஈ ) எச்சம் ☐

TEDC

7. கோணேசுவரர் கோவிலைச் சுற்றி ____________ கோட்டை அமைந்துள்ளது.

அ ) ஆங்கிலேயரது ☐ ஆ ) ஒல்லாந்தரது ☐
இ ) போர்த்துக்கேயரது ☐ ஈ ) ஐரோப்பியரது ☐

8. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) ஞாயிறு ☐ ஆ ) கதிரவன் ☐
இ ) திங்கள் ☐ ஈ ) சூரியன் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

9. "அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்..." என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) நல்வழி ☐ ஆ ) மூதுரை ☐
இ ) கொன்றைவேந்தன் ☐ ஈ ) ஆத்திசூடி ☐

10. நீங்கள் + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) நீங்களை ☐ ஆ ) எங்களை ☐
இ ) நாங்களை ☐ ஈ ) உங்களை ☐

11. ஆயுதம் ஏந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ ) 1972 ☐ ஆ ) 1962 ☐
இ ) 1970 ☐ ஈ ) 1974 ☐

12. புத்தர் வருகையின் போது ________ ஆட்சி இலங்கையில் இருந்தது.

அ ) சிங்களவரது ☐ ஆ ) தமிழரது ☐
இ ) போர்த்துக்கேயரது ☐ ஈ ) பறங்கியரது ☐

TEDC

13. வேளாண்மை என்ற சொல் குறிக்கும் தொழில்

அ ) கடற்றொழில் ☐ ஆ ) கைத்தொழில் ☐

இ ) நெசவுத்தொழில் ☐ ஈ ) உழவுத்தொழில் ☐

14. சினைப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) பட்டம் ☐ ஆ ) காது ☐

இ ) நூலகம் ☐ ஈ ) சதுரம் ☐

15. தன்னை நாடிவருவோர்க்கு இல்லை என்று கூறாது ஈயும் வள்ளல்

அ ) செங்கணான் ☐ ஆ ) சேனன் ☐

இ ) குமணன் ☐ ஈ ) இரும்பொறை ☐

16. கொக்குகளும் ஆமையும் ____________ வாழ்ந்தன.

அ ) கடலில் ☐ ஆ ) கிணற்றில் ☐

இ ) ஆற்றில் ☐ ஈ ) குளத்தில் ☐

17. சங்கிலியன் ____________ இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

அ ) பாசறையில் ☐ ஆ ) வீட்டில் ☐

இ ) அரண்மனையில் ☐ ஈ ) கோவிலில் ☐

18. சொல்லாலும் செயலாலும் வெளிப்படுவது

அ ) நாகரிகம் ☐ ஆ ) பண்பாடு ☐

இ ) மானம் ☐ ஈ ) உயர்வு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

19. மக்கள் போரினால் மிகவும் துன்பப்படுகின்றனர். இதில் இடம்பெற்றுள்ள பயனிலை

அ ) துன்பப்படுகின்றனர் ☐ ஆ ) மக்கள் ☐
இ ) மிகவும் ☐ ஈ ) போரினால் ☐

20. மீட்டினாள், வரைந்தாள் என்பன

அ ) நிகழ்காலம் ☐ ஆ ) இறந்தகாலம் ☐
இ ) எதிர்காலம் ☐ ஈ ) முக்காலம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

21. காகிதம் செய்வதற்குப் பயன்படும் பொருள்

அ ) கரும்பு ☐ ஆ ) மூங்கில் ☐
இ ) புல் ☐ ஈ ) வைக்கோல் ☐

22. வல்லின மெய்யெழுத்துகள்

அ ) க், ச் ☐ ஆ ) ங், ஞ் ☐
இ ) ய், ர் ☐ ஈ ) ண், ந் ☐

23. **பழமொழி:**

குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி

அ ) மங்கும் ☐ ஆ ) மங்காது ☐
இ ) பொங்கும் ☐ ஈ ) பொங்காது ☐

TEDC

24. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) இருந்தார்கள் ☐ ஆ ) பறந்தன ☐
இ ) பாய்ந்தது ☐ ஈ ) நடந்தாள் ☐

25. கையில் ஒரு விளக்குடன் சென்று பணிபுரிந்த பெண்

அ ) அன்னைதெரேசா        ஆ ) அன்னைபூபதி

இ ) புளோரன்சு நைட்டிங்கேல்        ஈ ) மேரிக்கியூரி

26. இலங்கையில் நாகரது ஆட்சி இருந்த இடம்

அ ) கொழும்பு        ஆ ) கல்யாணி

இ ) நாகதீபம்        ஈ ) கண்டி

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. வெற்றி என்பதன் எதிர்ச்சொல்

அ ) தோல்வி        ஆ ) பகை

இ ) வேற்றுமை        ஈ ) மகிழ்ச்சி

28. நெல்வயல்கள் __________க் காட்சியளித்தன.

அ ) பச்சைப்பசேலென        ஆ ) செக்கச்சிவந்து

இ ) இன்பதுன்பமாக        ஈ ) சாக்குப்போக்காக

29. கன்னியாவில் __________ வெந்நீர்க் கிணறுகள் உள்ளன.

அ) 6        ஆ ) 5

இ ) 7        ஈ ) 4

30. **குறள்:**

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் __________ பயன்

TEDC

அ ) பெற்ற        ஆ ) கற்ற

இ ) அற்ற        ஈ ) மற்ற

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உண்மை பேசுதல், பெற்றோரை மதித்தல், பிறருக்கு உதவுதல், போன்றன நல்ல ஒழுக்கங்களாகும். நல்ல ஒழுக்கம் என்றும் எமக்கு உயர்வைத் தரும். பொய்பேசுதல், களவெடுத்தல் போன்றன தீய ஒழுக்கங்களாகும். தீய ஒழுக்கங்கள் என்றும் எமக்குத் துன்பந்தரும். மாணவர்களாகிய நாம் தீய வழியில் செல்லக் கூடாது. நாம் நல்லொழுக்கத்தையும் கல்வியையும் இரு கண்களாகப் போற்ற வேண்டும். ஆசிரியர்கள், பெரியோர்கள் கூறும் நற் பழக்கவழக்கங்களை நாம் பின்பற்ற வேண்டும். நாம் என்றும் நல்லவர்களாக வாழ வேண்டும். உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் ஒழுக்கத்தைப் பேண வேண்டும் எனக் கூறுகின்றன. திருவள்ளுவரும் திருக்குறளில் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

1. நல்ல ஒழுக்கங்கள் எவை?

_______________________________________________

2. எவை எமக்குத் துன்பந் தரும்?

_______________________________________________

3. திருக்குறளில் ஒழுக்கம் பற்றிக் கூறும் அதிகாரம் எது?

_______________________________________________

4. நாம் எவற்றை இரு கண்களாகப் போற்ற வேண்டும்?

_______________________________________________

5. யார் கூறும் நற் பழக்கவழக்கங்களை நாம் பின்பற்ற வேண்டும்?

_______________________________________________

புள்ளிகள் 10

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. வவுனிக்குளத்தைக் கட்டிய மன்னன் யார்?

2. 'புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே..'என்ற நாட்டார் பாடல் எத்தொழிலுக்கு உரியது?

3. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வன்னியை ஆண்ட மன்னன் யார்?

4. ஒழுக்கத்தால் சிறந்தவர்களை தமிழர் எவ்வாறு அழைப்பர்?

5. போர்த்துக்கேயர் வருகையின் போது தமிழீழப் பகுதியில் நிலவிய அரசு எது?

6. எல்லாளனது ஆட்சியில் நாடு எப்படித் திகழ்ந்தது?

7. சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் இரண்டு தருக.

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.

## தமிழ்மொழி

| | | |
|---|---|---|
| மூவேந்தர் | துன்பம் | நிறையும் |
| தரும் | இன்பமொழி | |

எனது இன்பத் தாய்மொழி
மனது ________________ இனியமொழி
கன்னல் போல் இனித்திடும்
கழிப்பேருவகை அளித்திடும்

________________ போற்றி வளர்த்தமொழி
முக்கண்ணன் பெருமை பேசும்மொழி
இனிமை கூட்டும் ________________
இளமை காக்கும் அருமைமொழி

________________ போக்கும் துடிப்புமொழி
நன்மை ________________ நற்செம்மொழி
இதயத்தில் எழுந்த உண்மைமொழி
இனிமைத் தமிழே நீ வாழி!

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. 1. திணை எத்தனை வகைப்படும்? ______________________

2. அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________________

2. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுக.

நண்பகல் அன்பு நேற்று சிவப்பு ஆண்டு வட்டம்

| **காலப்பெயர்** | **குணப்பெயர்** |
|---|---|
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |

3. சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுக.

1. தாயகம் ________________________________________

2. உழவர் ________________________________________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

1. முன்னிலை ______________________

2. ஒன்றன்பால் ______________________

3. பன்மை ______________________

5. 1.நாம் எமது இனிய தாய்மொழியைக் கற்போம்.

2.கபிலர் பாரிமகளிரைக் காப்பாற்றினார். இச்சொல்லியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றைத் தருக.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| ______________ | ______________ | ______________ |
| ______________ | ______________ | ______________ |

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. நாம் எமது ____________________ ப் பாதுகாப்போம்.

   ( சுற்றுச்சூழலை, சுற்றுச்சூளலை )

2. எழிலன் விளையாட்டுத் ____________________ ச் சென்றான்.

   ( திடளுக்கு, திடலுக்கு )

3. மாவீரர் நாள் கார்த்திகை இருபத்தேழில் ____________________ .

   ( கொண்டாடப்படுகிறது, கொன்டாடப்படுகிறது )

4. ____________________ எமக்குக் காய் கனிகள் தருகின்றன.

   ( மறங்கள், மரங்கள் )

5. பாரி ஏழை மக்களுக்கு ____________________ ஊர்களைப் பரிசாக வழங்கினார்.

   ( முந்நூறு, முன்னூறு)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ நாட்டுப்புறப்பாடல்கள்
- ✸ தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும்
- ✸ கடல்
    - ➢ கடலில் வாழும் உயிரிகள்
    - ➢ கடலினால் கிடைக்கும் நன்மைகளும் தீமைகளும்
    - ➢ கடற்கரையில் நீர் விளையாடும் விளையாட்டுகள்

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC